DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 683/2025**

**eposition of LW2 examined as PW2** Dt. 24.03.2026

| | |
|---|---|
| Name | செந்தில் |
| Father's Name | நடேசன் |
| Village | கள்ளிக்காடு |
| Taluk | குத்தாலம் |
| Age | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.03.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 13.02.2024-ம் தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் நான் எனது TN 05 U 6358 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super இருசக்கர வாகனத்தில் கள்ளிக்காட்டில் இருந்து புறப்பட்டு கோமல் கடைவீதிக்கு சென்ற போது அதே திசையில் பின்னர் கேட்டு தெரிந்து கொண்ட TN 68 U 8346 என்ற பதிவுஎண் கொண்ட டாட்டா செஸ்ட் ஒயிட் கலர் காரை அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் அதன் ஓட்டுனர் ஓட்டி வந்து நான் ஓட்டி வந்த வண்டியின் பின்னால் மோதியதில் நான் கீழே விழுந்ததில் எனக்கு வலது விலாவில் அடிபட்டது. விபத்தை கேள்விப்பட்டு அங்கு வந்த எனது மைத்துனர் முருகன் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு மருத்துவர்கள் முதல் உதவி சிகிச்சை அளித்து பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் மயக்கத்தில் இருந்ததால் பாலையூர் போலீசார் விசாரிக்க எனது மைத்துனர் முருகன் புகார் வாக்குமூலம் கொடுத்தார். சிகிச்சைக்கு பின்னர் மோதியவர் பற்றி விசாரிக்க அவர் கும்பகோணம் மருதநல்லூர் நந்திவனம் காமராஜர் காலனியில் வசிக்கும் பன்னீர்செல்வம் மகன் பிரபாகர் என சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை

ன்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை